நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

**NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2021

**ஆரம்பப் பிரிவு (ஆண்டு 3, 4)**

Level : Basic (Year 3 & 4)

**வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்**

Time Given : 60 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**
**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை - 2021
## ஆரம்பப் பிரிவு (ஆண்டு 3, 4)

***For Questions 1 to 3 choose the word(s) that best describe action shown in the pictures.***

1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்க

01. யானை
 (அ) விளையாடுகிறது
 (ஆ) பாடுகிறது
 (இ) உண்கிறது
 (ஈ) குளிக்கிறது



02. குதிரை
 (அ) நிற்கின்றது
 (ஆ) பாய்கின்றது
 (இ) இருகின்றது
 (ஈ) ஓடுகின்றது



03. கண்ணன் மரத்தின் அருகில் இருந்து
 (அ) நடக்கிறான்
 (ஆ) ஓடுகிறான்
 (இ) படிக்கிறான்
 (ஈ) குளிக்கிறான்



***Choose the correct answer for questions 4 to 16.***

4 முதல் 16 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

04. நாய் ஒரு ..........................................
 (அ) நீர்வாழ் உயிரினம் (இ) பறவையினம்
 (ஆ) வீட்டு மிருகம் (ஈ) காட்டு மிருகம்

05. செல்லப் பிராணியாக வீட்டில் வளர்க்கக்கூடிய பிராணி எது?
 (அ) புலி (இ) சிங்கம்
 (ஆ) பூனை (ஈ) நரி

06. பறவையினம் எவை?
 (அ) சிங்கம், யானை, நாய் (இ) கிளி, மயில், புறா
 (ஆ) மீன், திருக்கை மீன், சுறா (ஈ) வண்ணத்துப் பூச்சி, கரப்பான் பூச்சி, சிலந்தி

07. உங்கள் அம்மாவின் தம்பியை எப்படி அழைப்பீர்கள்?

(அ) பெரியப்பா (இ) மாமா

(ஆ) சித்தப்பா (ஈ) தாத்தா

08. தமிழர்களின் பொங்கல் திருநாள் எந்த மாதத்தில் கொண்டாடப்படுகின்றது?

(அ) தை மாதம் (இ) ஐப்பசி மாதம்

(ஆ) சித்திரை மாதம் (ஈ) மார்கழி மாதம்

09. தாத்தா, பாட்டி, பெரியப்பா, மாமா, மாமி எல்லோரும் எனது...................................

(அ) நண்பர்கள் (இ) பயணிகள்

(ஆ) உறவினர்கள் (ஈ) சிறுவர்கள்

10. "ஓடி விளையாடு பாப்பா" என பாப்பாப் பாட்டு எழுதியவர் யார்?

(அ) பாரதியார் (இ) திருவள்ளுவர்

(ஆ) கவிச்சக்கரவர்த்தி கம்பர் (ஈ) இளங்கோ அடிகள்

11. திருவள்ளுவர் இயற்றியது

(அ) பாப்பாப் பாட்டு (இ) திருக்குறள்

(ஆ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்

12. கண்ணகியின் கதை சொல்லும் சிலப்பதிகாரத்தை எழுதியவர்

(அ) பாரதியார் (இ) திருவள்ளுவர்

(ஆ) கம்பர் (ஈ) இளங்கோ அடிகள்

13. கண், காது, மூக்கு, வாய், உடல். இவை ஐந்தும் .................................... எனப்படும்.

(அ) ஐந்து பொருட்கள் (இ) ஐந்து கலைகள்

(ஆ) ஐம்பொறிகள் (ஈ) ஐந்து காலங்கள்

14. " இளமையிற் கல்வி சிலையில் எழுத்து " என்பதன் கருத்து

(அ) சிறிய வயதில் படிப்பது நல்லது. மனதில் நன்றாகப் பதியும்.

(ஆ) சிறிய வயதில் படிப்பது கூடாது.

(இ) சிறிய வயதில் படிக்காமல் விளையாட வேண்டும்.

(ஈ) சிறிய வயதில் படிக்கத் தேவையில்லை

15. புதுவருடத்துக்கு அம்மா சிற்றுண்டிகள் தயாரித்தார். சிற்றுண்டி என்பது

(அ) தேநீர், தண்ணீர் (இ) மோதகம், வடை, முறுக்கு

(ஆ) பால், தயிர், மோர் (ஈ) வாழைப்பழம், மாம்பழம்

16. சிட்னியில் இப்போது உள்ள காலநிலை என்ன?

(அ) வசந்த காலம் (இ) இலையுதிர் காலம்

(ஆ) கோடைக் காலம் (ஈ) குளிர் காலம்

## *For questions 17 to 22 choose the word that has the closest meaning to the underlined word.*

## 17 முதல் 22 வரையான வினாக்களுக்கு கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.

17. **அன்னையும்** பிதாவும் முன்னறி தெய்வம்.

(அ) மாமா (இ) தாத்தா

(ஆ) அம்மா (ஈ) அக்கா

18. <u>ஆலயம்</u> தொழுவது சாலவும் நன்று.

(அ) கோயில் (இ) வீடு

(ஆ) பாடசாலை (ஈ) கடை

19. வாணியின் குறிப்புப் புத்தகத்தில் சில <u>தவறான தகவல்கள்</u> இருந்தன.

(அ) தேவையில்லாத தகவல்கள் (இ) சுவாரஸ்யமான தகவல்கள்

(ஆ) சில தகவல்கள் (ஈ) பிழையான தகவல்கள்

20. வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவை <u>வாத்தியங்கள்</u> ஆகும்.

(அ) புத்தகங்கள் (இ) இசைக் கருவிகள்

(ஆ) காட்சிப் பொருட்கள் (ஈ) உணவுப் பொருட்கள்

21. <u>வேந்தர்</u> என்றால்

(அ) அரசர் (இ) மாணவர்

(ஆ) நடிகர் (ஈ) ஆசிரியர்

22. விமான நிலையத்தில் பெருந்தொகையான <u>பிரயாணிகள்</u> இருப்பதை வாணி பார்த்தாள்.

(அ) ஆசிரியர்கள் (இ) மாணவர்கள்

(ஆ) பயணிகள் (ஈ) சிறுவர்கள்

***For question 23 to 26, Choose the word that has the opposite meaning to the underlined word.***

**23 முதல் 26 வரையான வினாக்களுக்கு கோடிட்ட சொல்லுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.**

23. நாய்க்குட்டியைப் பார்த்தவுடன் தம்பி <u>மகிழ்ச்சி</u> அடைந்தான்

(அ) இன்பம் (இ) குதூகலம்

(ஆ) சந்தோசம் (ஈ) துக்கம்

24. அக்கா <u>இலகுவான</u> கணக்கைச் செய்து காட்டினாள்.

(அ) அழகான (இ) கடினமான

(ஆ) வடிவான (ஈ) நீளமான

25. <u>இரவு</u> நேரம் வானத்தில் நிலா தோன்றும்.

(அ) பகல் (இ) மழை

(ஆ) கருமை (ஈ) கிழமை

26. <u>தடித்த தோலுடன்</u> முதலையின் தோற்றம் பயத்தைத் தந்தது.

(அ) பெரிய தோல் (இ) மென்மையான தோல்

(ஆ) நீளமான தோல் (ஈ) வடிவான தோல்

***For questions 27 to 30, choose the correct word to complete the sentence.***

**27 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.**

27. நாளை, நான் தமிழ்ப் பாடசாலை நண்பர்களுடன் தமிழில் ...............................................

(அ) பேசுவேன் (இ) பேசினேன்

(ஆ) பேசுகின்றேன் (ஈ) பேசவில்லை

28. நான் அடுத்த மாதம் மெல்பேன் பெரியப்பா வீட்டிற்குச் ...............................................

(அ) சென்றேன் (இ) சென்று வந்தேன்

(ஆ) செல்வேன் (ஈ) சென்றுவிட்டேன்

29. சென்ற வருடம்(2020), எமது கலைவிழாவில் என் தங்கை நடனம் ...............................................

(அ) பாடுவாள் (இ) ஆடமாட்டாள்

(ஆ) ஆடினாள் (ஈ) ஆடுகின்றாள்

30. நேற்று நான் தமிழை நன்றாகப் ...............................................

(அ) படித்தேன் (இ) படிக்கமாட்டேன்

(ஆ) படிக்கின்றேன் (ஈ) படிப்பேன்

***Read and understand the given poem and answer questions 31 to 34.***

**கீழே தரப்பட்ட கவிதையை வாசித்து 31 முதல் 34 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

## தமிழ் எழுத்துக்கள்

"அ" னா, "ஆ" வன்னா உயிரெழுத்து
பன்னிரண்டுள்ளது அறிவீரே
"க்" கன்னா, "ங்" ஙன்னா மெய்யெழுத்து
பதினெட்டுள்ளன புள்ளிகளோடு

இரண்டும் சேர்ந்தால் உயிர்மெய்யெழுத்து
இரண்டையும் பெருக்க இருநூற்றுப் பதினாறு
தெளிவாய்க் கற்றோம் நாமின்று
தெளிவுறச் செய்தார் ஆசிரியை

மூன்று குற்றில் ஓர் எழுத்து
ஆய்த எழுத்தாம் அஃகேனம்
ஒன்றுசேர்த்தால் இருநூற்று நாற்பத்தேழு
தமிழில் எழுத்துக்கள் அறிவோம் நாமே

**இயற்றியவர் :- தணிகா திரு**

31. **உயிர் எழுத்துக்கள்** எத்தனை?

(அ) 18 (இ) இருநூற்றுப் பதினாறு

(ஆ) 12 (ஈ) இருநூற்று நாற்பத்தேழு

32. **மெய் எழுத்துக்கள்** எவை?

(அ) ஒ, ஊ (இ) னெ, ணே

(ஆ) க், ங் (ஈ) ய, ர

33. " **அஃகேனம்** " என்பது

(அ) உயிர் எழுத்து (இ) ஃ

(ஆ) மெய் எழுத்து (ஈ) உயிர்மெய் எழுத்து

34. தமிழில் மொத்தம் **எத்தனை எழுத்துக்கள்** உள்ளன?

(அ) பன்னிரண்டு (இ) இருநூற்றுப் பதினாறு

(ஆ) பதினெட்டு (ஈ) இருநூற்று நாற்பத்தேழு

***For question 35, choose the response that combines the sentence in the best way.***

**கீழே தரப்பட்ட வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.**

35. 01. நாங்கள் பிறிஸ்பேனுக்கு சென்றோம்.

02. ஒரு வாரத்திற்கு பின்பு சிட்னிக்கு வந்தோம்.

03. பல்வேறு இடங்களை சுற்றிப் பார்த்தோம்.

04. மாமாவின் வீட்டில் தங்கினோம்.

05. எங்களுக்கு பாடசாலை விடுமுறை விடப்பட்டது.

(அ) (2), (1), (3), (5), (4) (இ) (5), (1), (4), (3), (2)

(ஆ) (3), (4), (1), (2), (5) (ஈ) (1), (4), (3), (5), (2)

***For questions 36 to 40 choose the correct word that is spelt incorrectly in the the underlined word.***

**36முதல் 40 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லில் உள்ள எழுத்துப் பிழையான சொல்லிற்குரிய சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

36. தாத்தா தினமும் <u>மாம்பலம்</u> விரும்பிச் சாப்பிடுவார்.

(அ) மாம்பலம் (இ) மாம்பளம்

(ஆ) மாம்பழம் (ஈ) மாம்பள்ளம்

37. சென்ற ஆண்டு எமது <u>கழை விழா</u> நன்றாக நடந்தது.

(அ) கலை விழா (இ) களை விழா

(ஆ) கழை விழா (ஈ) கல்ழை விழா

38. எனது அம்மாவின் <u>கன்கள்</u> அழகாக இருக்கும்.

(அ) கன்கள் (இ) கண்காள்

(ஆ) கண்கள் (ஈ) கன்காள்

39. நாங்கள் <u>ஆன்டு</u> மூன்று மாணவர்கள்.

(அ) ஆண்டு (இ) அன்டு

(ஆ) ஆன்டு (ஈ) அண்டு

40. நேற்றுக் கடும் <u>மளை</u> பெய்தது.

(அ) மளை (இ) மலை

(ஆ) மாலை (ஈ) மழை

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த
# தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL
# TAMIL PROFICIENCY EXAMINATION

# 2021

Email:info@nswfts.org.au
www.nswfts.org.au